பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.278/2021

வா.சா.– 1– ராஜேந்திரன் , த/பெ.வேலுச்சாமி

நாள். 02.02.2026

<u>வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 3 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

1ம் பிரதிவாதி ஜெயராம் எனது சகோதரர் ஆவார். 2ம் பிரதிவாதி எனது சகோதரியின் மகன் ஆவார். நானும் 1ம் பிரதிவாதி ஜெயராமும் 2010 ம் வருடம் வரை ஒரே வீட்டில் கூட்டுக் குடும்பமாக இருந்து வந்தோம். தாவா சொத்துக்களில் 1/2 பாகம் எனக்கு பிரித்து தரவேண்டும் என்றும், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும் 2ம் பிரதிவாதி 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு அதை தொடர்ந்து 3 முதல் 5 பிரதிவாதிகள் 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு செய்து கொடுத்த கிரையம் செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து பூர்வீக சொத்து அல்ல. தாவா சொத்து கிரைய சொத்து ஆகும். தாவா சொத்தின் சர்வே எண். 969/4 சி ல் 5 ஏக்கர் 46 செண்ட் விஸ்தீரணம் ஆகும். தாவா சொத்து 09.05.2001 ன் படியும், 18.06.2001ன் படியும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதன் ஜெராக்ஸ் காப்பியை வா.சா.ஆ.17,18 ஆக நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1. கிரையப்பத்திரத்தில் 6 ஏக்கர் 5 செண்ட் 1ம் பிரதிவாதிவாதி கிரையம் பெற்றுள்ளது கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ல் 18.6.2001ல் 11ஏக்கர் 30 செண்ட்ல் 2 ஏக்கர் 61 செண்ட் கிரையம் பெற்றதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 கிரையப்பத்திரங்களிலும் 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் செய்தவர்கள் ரொக்கமாக பெற்றுக் கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.17,18 க்குண்டான கிரைய தொகையை நான் பிராதில் சொல்லியுள்ளபடி , எப்போது எவ்வளவு தொகை என குறிப்பிட்டு சொல்ல இயலாது. தாவா கிரையத் தொகை 1ம் பிரதிவாதிக்கு நான் கணக்கு மூலமாக அனுப்பியதாக காட்ட முடியாது என்றால் நான் கூட்டுக் குடும்பமாக இருந்ததால் காட்ட முடியாது. மேற்படி கிரையத் தொகையை நான் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில்

சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களும் நான் கொடுத்த பணத்தில்தான் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.17, 18 மூலமாக 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றது 8 ஏக்கர் 66 செண்ட் என்றால் சரிதான். மேற்படி இடத்தில்தான் எனக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். தாவாவில்நான் குறிப்பிட்டுள்ளது 5 ஏக்கர் 46 செண்ட் என்றால் சரிதான். மீதமுள்ள 3 ஏக்கரை பொறுத்து பொது மனிதர்களை வைத்து பேசிய போது பணம் கொடுப்பதாக சொல்லியுள்ளார்கள். 3 ஏக்கரை மொத்த தொகை 70 லட்சத்திற்கு விற்கப்பட்டது. அதில் 30 லட்சத்தை கொடுத்தார். மீதி 5 ஏக்கரை விற்கும் போது மீதி பணம் தருவதாக 1ம் பிரதிவாதி கூறினார். மேற்படி விவரங்களை தாவாவில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். ரூ.30 லட்சம் கொடுத்தார் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது போது 1ம் பிரதிவாதி எந்த பணமும் கொடுக்கவில்லை என்பதால்தான் நான் ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் தாவா சொத்தில் ஆண்டவர் சேம்பர்ஸ் என்று தொழில் நடத்தி வந்தோம் என்றால் சரிதான். 30.10.2008 ல் 1ம் பிரதிவாதி அடகு வைத்த ஸ்டேட் பேங்க் வங்கியில் எம்.ஒ.டியில் 1ம்பிரதிவாதி கையெழுத்திட்டுள்ளார் என்றாலும் நான் சாட்சி கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவருடைய சொத்து என்பதால்தான் அவர் மட்டுமே எம்ஒடி ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. 10.07.2009 ல் நான் தாவா சொத்தை பிரதீப் பாண்டியன் என்பவருடன் ஒரு சேல் அக்ரிமென்ட் 1ம்பிரதிவாதியால் சுயார்ஜிதமாக சம்பாதிக்கப்பட்ட சொத்து என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்து பொதுவாக யார் பெயரில் உள்ளதோ அவர் அவ்வாறு போடுவது சரிதான். அசல் வழக்கு எண் 78/2012 உரிமை குறித்தல்ல, அனுபவம் குறித்துதான் என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு எனக்கு சாதகமாக அமைந்துள்ளது. தாவாசொத்திற்கு கிரையம் என் பெயரில் இல்லை என்றால் சரிதான். என் பெயரில் பட்டாவும் இல்லை. என் அண்ணன் பெயரில்தான் பட்டா உள்ளது. தாவா சொத்து என் அண்ணனின் சொத்தா என்றால் கூட்டுக் குடும்ப சொத்து. கிரையத் தொகை முழுவதும் நான் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால்

சரிதான். அவ்வாறு இருக்கையில் நான் கூட்டுக் குடும்ப சொத்து என எவ்வாறு கூறுகிறேன் என்றால் குடும்பத்தில் மூத்தவர் எனது அண்ணன் என்பதால் கூட்டுக் குடும்ப சொத்தாக பாவித்து வருகிறோம். 6 ஏக்கர் 5 செண்ட் ல் 3 ஏக்கரை நிவிஸ் ஜூமானா என்பவருக்கு 10.09.2019 ல் 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மீதமுள்ள 5 ஏக்கர் 46 செண்ட்டை 1ம்பிரதிவாதி தனது மகனான 2ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் பின்னிட்டு எனக்கு தெரிய வந்தது. அதன் தொடர்ச்சியாக நான் போலிசில் புகார் அளித்தேன். அந்த 5 ஏக்கர் 46 செண்ட் 2 ம்பிரதிவாதி 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து வைத்து பின்னிட்டு அவர்கள் 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். 3 முதல் 5 பிரதிவாதிகள் நடத்தி வந்த ஆல்கா பிரிட்ஜ் என்ற நிறுவனத்திற்கு கிரையம் செய்யப்பட்டது என்றால் நிறுவனத்திற்கோ, தனி நபருக்கோ என்று சரியாக தெரியாது. 3 ஏக்கரை கிரையம் பெற்ற நிவிஸ் ஜூமானா மற்றும் 5 ஏக்கர் 46 செண்ட் கிரையம் பெற்ற ஆல்கா பிரிட்ஜ் தரப்பினரை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சேர்க்க வேண்டிய நபர்களை சேர்க்காமல் விட்டதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும் 3 ஏக்கரை இந்த வழக்கில் வழக்கு சொத்தாக சேர்க்காததால் வழக்கு Partial partition நிராகரிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் நிவிஸ் ஜூமானாவுக்கு 2019 ல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 2020ம் பதில் அனுப்பபட்டது என்றால் சரிதான். நானும் 1ம் பிரதிவாதியும் கூட்டாக ஆரம்பித்த ஆண்டவர் பிரிக்ஸ் சேம்பர்ஸ் கூட்டாண்மை கலைப்பு செய்யப்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்குத்தான் உண்மையில் பாத்தியப்பட்டது என்றாலும் அதை முறையான பின்னிட்டு ஆவணங்களால் ஏனைய பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் நானும் 1ம் பிரதிவாதியும் சகோதரர் என்பதால் கிரையம் பெற்ற 6 முதல் 8 பிரதிவாதிகளை மிரட்டுவதற்ககாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ.2 ல் தாக்கல் செய்துள்ள சலானிற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.02 05:11:50 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.